கூடுதல் மாவட்ட  நீதிமன்றம், திண்டுக்கல்

எம்.சி.ஓ.பி எண்.28/2021

ம.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.தேவசகாயம் | தொழில் | |
| த/க  பெயர் | அருளப்பன் | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 25.07.2025 |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு  10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் 3 **ஆம்** தரப்பினர்  ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தை என் முதல் நிலை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

<u>2 ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். மனுதாரர் அழைத்ததால் வந்தேன். நான் சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவு எண்ணை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் வனிதா பாஸ்டின் என்பவர் கொடுத்த புகாரின் பேரில் தான் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது என்றால் சரிதான்.  நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு லாரிக்கு பின்னால் தான் நான் போனேன் என்றால் தவறு.  லாரி எதிரே வந்தது.  போலிசார் என்னை விசாரிக்கவில்லை. வனிதாபாஸ்டின்  என்பவருக்கு நான் விபத்தை பற்றி தெரிவிக்கவில்லை.  நான் முற்றிலும் உண்மைக்கு புறம்பாண சங்கதிகளை நிரூபண வாக்கு மூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.  போலிசார் தாக்கல் செய்த இறுதி அறிக்கையில் என்னை சாட்சியாக காட்டவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் இறந்தவரும் நானும் ஒரே ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்காமல் மனுதாரர் என்கது வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.07.26 20:45:16 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.